# பகுதி – 4

## செயலாக்க அமைப்பைச் சீரமைத்தல் சுருக்கம்

7. பத்தி 4.1.22ல் கண்டுள்ளவாறு ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்த /மறுவகைப்படுத்த தனி நபர் நிலவரி வருவாய் குறித்த வரைமுறைகள் திருத்தியமைக்கப்படலாம். இந்த கொள்கை அடிப்படையில் தொடர்ந்து தனிநபர் நிலவரி வருவாய் குறித்த வரைமுறைகள், ஊராட்சி ஒன்றியங்களை வகைப்படுத்த/மறுவகைப்படுத்த பயன்படுத்தலாம். (4.1..23)

8. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஆறு வகைகளாக வகைப்படுத்துவது குறித்த விவரங்களை, 4.1.22ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளின் அடிப்படையில், மாவட்டாட்சியர்கள், ஊரக வளர்ச்சி இயக்குநரைக் கலந்தாலோசித்து முடிவு செய்யலாம்.

9. ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாக நிலை உயர்த்துவதற்கான வரைமுறைகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்படலாம். ( பத்தி4.1.33)

(i) மக்கள் தொகை 15, 000க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(ii) ஆண்டு சராசரி வருமானம் (கடன்கள், காலாவதியான முன்பணங்கள், வீட்டு வரி ஈட்டு மானியம், சட்டபடிக் கல்லாத மற்றும் வளர்ச்சிப்பணி மானியங்கள் முதலியன நீங்கலாக) ரூ:10 இலட்சத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(iii) வேளாண்மை சாராப்பணிகளில் நியாயமான அளவுக்கு (விழுக்காடு) வேலைவாய்ப்பு இருக்க வேண்டும்.

10. 1991ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 10,000 க்கும் குறைவான மக்கள் தொகைக் கொண்ட, ஊரகத் தன்மை வாய்ந்த 420 பேரூராட்சிகளில் 92 பேரூராட்சிகளின் ஆண்டு வருமானம் ரூ 5 லட்சத்திற்கும் குறைவாக உள்ளது. நகரத்தன்மை வாய்ந்த 215 பேரூராட்சிகளில், 6 பேரூராட்சிகள், ரூ:5 லட்சத்திற்கும் குறைவான வருமானம் கொண்டவையாக உள்ளன. எனவே, இந்த 98 பேரூராட்சிகளின் (92 + 6) நிதி நிலையினை உயர்த்த சிறப்புக் கவனம் செலுத்தலாம். அப்பேரூராட்சிகளை, பேரூராட்சிகள் இயக்குநரைக் கலந்தாலோசித்து ஊராட்சிகளாக வகை மாற்றம் செய்யலாம் வேண்டும். அல்லது அங்கு அடிப்படை வசதிகளை பெருக்குவதற்கும், அவற்றை பராமரிப்பதற்குமாக சிறப்பு நிதிவசதி செய்ய வேண்டும். இணைப்பு .103 (பத்தி 4.1.34)

11. செலவு உயர்வு, நிறைவேற்றப்பட வேண்டிய அடிப்படை வசதி அளவு, நியமிக்கப்பட வேண்டிய குறைந்த அளவுப் பணியாளர்கள், ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில், பேரூராட்சிகளை வகைப்பாடு/ மறுவகைப்பாடு செய்யும்போது, கீழ்க்கண்ட மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருமான அளவுகோல்கள் பின்பற்றப்படலாம் ( பத்த 4.1.36)

உத்தேச அளவுகோல்

| நிலை | மக்கள்தொகை | கடைசி மூன்றாண்டுகளில் சராசரி ஆண்டு –வருமானம் |
|---|---|---|
| II | 10,000 வரை | ரூ 10 இலட்சத்திற்குமேல்; |
| I | 10,000 க்குமேல் 15,000க்குள் | ரூ 15 இலட்சத்திற்குமேல்; |
| தேர்வுநிலை | 15,000 மேல் 20,000 க்குள் | ரூ 20 இலட்சத்திற்கு மேல்; |
| சிறப்புநிலை | 20,000 க்குமேல் | ரூ 50 இலட்சத்திற்குமேல்; |

குறிப்பு: கடன்கள், காலாவதியான வைப்புத்தொகைகள், சட்டப்படிக்கல்லாத மானியங்கள், வளர்ச்சிப்பணி மானியங்கள் முதலியன சராசரி ஆண்டு வருவாய் கணக்கிடும்போது நீக்கப்பட வேண்டும்.

**12.** ஒரு பேரூராட்சியை நகராட்சியாக நிலை உயர்ந்த, ஒரு பகுதியை நகராட்சியாக்க, பின்வரும் வரைமுறைகளை நிர்ணயிக்கலாம். ( பத்தி 4.1.40)

(i) நகரத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும்; மக்கள் தொகை நெருக்கம் தொடர்பான கணக்கெடுப்பு வரைமுறைகளை நிறைவு செய்ய வேண்டும்; பணிபுரியும் ஆண்களில் 75 சதவீதத்திற்கும் அதிகமானோர் வேளாண்மை சாரா பணிகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

(ii) குறைந்தது 30,000 மக்கள்தொகை இருக்க வேண்டும்.

(iii) சடட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப்பணி மானியங்கள், கடன்கள், காலாவதியான வைப்புத் தொகைகள் முதலியவை நீங்கலான சராசரி ஆண்டு வருமானம் (கடைசி மூன்றாண்டுகளின் அடிப்படையில்) ரூ:50 இலட்சத்திற்குக் கூடுதலாக இருத்தல் வேண்டும்.

**13.** நகராட்சிகளை வகைப்பாடு/மறுவகைப்பாடு செய்ய பின்வரும் திருத்தியமைக்கப்பட்ட வரைமுறைகள் பின்பற்றப்படலாம். சராசரி ஆண்டு வருமான அளவைக் கணக்கிட, கடன்கள், காலாவதியான வைப்புத் தொகைகள், சட்டப்படிக்கல்லாத மற்றும் வளர்ச்சிப்பணி மானியங்கள் முதலியன கணக்கில் கொள்ளலாகாது (பத்தி 4.1.45).

| நகராட்சி நிலை | வரைமுறைகள் |
|---|---|
| | கடைசி 3 ஆண்டுகளின் அடிப்படையிலான சராசரி ஆண்டு வருமானம் (ரூ) |
| II | 50 இலட்சத்திற்கு மேல் |
| I | 100 இலட்சத்திற்குமேல் |
| தேர்வு நிலை | 200 இலட்சத்திற்குமேல் |
| சிறப்பு நிலை | 500 இலட்சத்திற்குமேல் |

குறிப்பு: தற்போதைய நகர்புறப் பகுதிகளிடையேயிருந்து புதிதாக நிலை III நகராட்சி அமைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவாக இல்லை என்பதால் நிலை III நகராட்சிகள் பற்றி பரிசீலிக்கவில்லை.

**14.** ஒரு மாநகராட்சி அமைக்க அல்லது ஒரு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்த பின்வரும் அளவுகோல்கள் இனி வருங்காலத்தில் பின்பற்றப்படலாம். (பத்தி 4.1..48)

(i) குறைந்தளவு மக்கள் தொகை 10 இலட்சம்.

(ii) சராசரி ஆண்டுவருமானம் ரூ 50 கோடி.

## பிரிவு : 2. உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடுகள் (Functions)

15. உள்ளாட்சி மன்றங்களுக்கு தற்போதுள்ள அதிகாரங்களுடன், முறையே 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்படியும், 1994ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படியும், தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்களின்படியும், உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், உள்ளாட்சி மன்றங்கள் திறம்பட செயலாற்றுவதற்குப் போதுமானவையாகும். குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை முந்தைய ஊராட்சிகள் சட்டங்களில் வகை செய்யப்பட்டதைப் போன்று ஊராட்சிகளின் கட்டாயப் பணிகளுடன் சேர்த்து விடலாம். (பத்தி 4.2.14)

## பிரிவு: 3. அதிகாரங்கள் வழங்குதல். (Devolution of Functions)

16. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கும், நகராட்சி அமைப்புகளுக்கும் பிரித்துக் கொடுப்பதற்காக மாநிலச் சட்டங்களில் முறையே 29 மற்றும் 18 பணிகள் குறிப்பிட்டுள்ள போதிலும், ஒவ்வொரு அடுக்குமுறைக்கும் ஒதுக்க வேண்டிய பணிகள் எவையெவையெனத் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ஒவ்வொரு அடுக்கு முறைக்கும் (Tier) ஒதுக்க வேண்டிய பணிகளைத் தெளிவாக வரையறுப்பதற்காக, மாநில நிதி ஆணையம் நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட 17 அரசுத்துறைச் செயலாளர்களுடனும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுடனும் விவாதித்து, பரஸ்பர ஒப்புதலின் பேரில் தொடக்க நிலையில் பிரித்துக் கொடுக்க வேண்டிய பணிகள் முடிவு செய்யப்பட்டு விட்டன. விரைவில் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்காக அரசுச் செயலாளர்களுக்கு, மாதிரி செயற்குறிப்புகளின் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 104, 105 (பத்தி 4.3.14)

## பிரிவு: 4. பணியாளரமைப்பு முறை

17. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட போது தான், தற்போதைய அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டதால், உள்ளாட்சி மன்றங்களின் கட்டமைப்பை, குறிப்பாக, ஊரக உள்ளாட்சி மன்றங்களின் கட்டமைப்பைச் சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அரசு (நிதித் துறை) இதனை உணர்ந்து, சென்னை அண்ணா மேலாண்மை நிருவாகப் பயிற்சி நிறுவனத்தின் பொறுப்பில் பணிக்குழு ஒன்றை ஏற்படுத்த ஒப்புக் கொண்டது. இருப்பினும், இது தொடர்பாக பணிக்குழு அளித்த பரிந்துரைகள் கூர்உணர்வுடையதாக இருப்பதைக் கருத்திற்கொண்டும், அரசு நிலையில் இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாலும், பணிக் குழுவின் இப்பரிந்துரைகள் குறித்து கருத்து ஏதும் தெரிவிக்காமலிருப்பது என்றும், அவசியமெனக் கருதப்பட்டால், பணிக் குழுவின் அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க அரசிடமே விட்டுவிடுவது என்றும் மாநில நிதி ஆணையம், தீர ஆய்வு செய்த பின்னர் முடிவு செய்துள்ளது.

18. ஊராட்சிகளில் தெருக்களை சுத்தம் செய்வது, துப்புரவுப்பணி முதலான அன்றாடப் பணிகள் ஒட்டு மொத்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் தனியாரிடம் விடப்படலாம். ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் தனியாகப் பணியாளர்கள் எவரையும் நியமிக்க வேண்டுவதில்லை. (பத்தி 4.4.13)

19. பல அமைப்புகள் அடங்கிய அதாவது ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிக்கான ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரையில், பராமரிப்புப் பணியை, தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியத்திடம் விட்டு விடுவது நல்லது.. ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் திட்டங்கள் நீங்கலான ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனித்தனியே குடிநீர் வழங்கி வருகின்ற ஏனைய குடி நீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தமட்டில், பராமரிப்புப் பணியை ஊராட்சியின் பொறுப்பில் விடுவது சிறந்தது. இந்த ஊராட்சிகள், தேவைப்படின் இப் பணிக்கென பயிற்சி பெற்ற உள்ளூர் தொண்டு அமைப்புகளின் உதவியை நாடலாம்.

**20.** பல்வேறு உள்ளாட்சி மன்றங்களில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் அல்லது பிற வகையிலான பணிகள் அதிகரித்து வருவதால், குறிப்பாக ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் பொறியியல் பிரிவை ஏற்படுத்த வேண்டிய , வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் அதிகரித்து வருகிறது. உள்ளாட்சி மன்றங்களில் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் பணிகளையொட்டி மேற்சொன்ன தேவை குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

**21.** மத்திய அரசின் நிதியுதவி பெறம் சிறு மற்றும் நடுத்தர நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், மாநில அரசின் நிதியுதவி பெறும் ஒருங்கிணைந்த நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி, குடிநீர் வழங்கல் திட்டம் போன்ற சிறப்புத் திடடங்களைப் பொறுத்தவரையில், திட்டப்பணியாளர்கள் குறித்த செலவினை, அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அல்லது ஏற்கனவேயுள்ள பணியார்களாக இருந்தாலும், திட்டப்பணியில் சேர்க்கப்பட்டு, ஒட்டு மொத்தத் திட்டச் செலவின் ஒரு பகுதியாக அமைத்தல் வேண்டும்.(பத்தி 4.4.45)

## பிரிவு: 5. மனித வளமேம்பாடு மற்றும் பயிற்சி:

**22.** உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்கள் மற்றும் பொறுப்புகளில் தொடர்புடைய, அலுவல் சார்பற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோருக்கு புகுமுக, செயல்பாடுகள் பற்றிய, மற்றும் நிருவாகப் பயிற்சி அளிக்கப்படல் வேண்டும். (பத்தி 4.5.16)

**23.** மனிதவள மேம்பாட்டுத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஓர் உயர் அமைப்பான சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனம், உள்ளூர் அரசு அமைப்புகளிலும், சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகள்,சார்பு அமைப்புகளிலுள்ள, பணிகள் தொடர்பான பயிற்சித் தேவைகளை மதிப்பிடும் ஓர் ஆலோசனை அமைப்பாக தொடர்ந்து செயல்பட்டு, விரிவான பயிற்சித் திட்டத்தை வகுத்தளிக்கலாம். (பத்தி 4.5.16)

**24.** சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனமும், மறைமலைநகர்– மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனமும். கோயம்புத்தூர் – நகர்ப்பகுதி ஆய்வு நிறுவனமும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதுடன், "உள்ளாட்சி மன்றங்களில் நிதி நிருவாகம்", " உள்ளாட்சி மன்றங்களில் சேவைப்பணிகள் நிருவாகம்" ஆகிய அம்சங்களில் உள்ளாட்சி மன்றங்கள் மற்றம் சார்பு முகவரமைப்புகள்/துறைகளின் சிலவகை அலுவலர்களுக்கு பயிற்சியும் அளிக்கும்.

**25.** பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஐதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் ஏற்கெனவே உருவாக்கியுள்ள பயிற்சி முறைகயையும், நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைபபுகளக்கான புது டெல்லியிலுள்ள தேசிய நகர்ப்பகுதி செயல் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பயிற்சி முறைகளையும் பயன்படுத்திக்கொள்வது அவசியம் ஆகும். இப்பயிற்சித்திட்டம் முழுவதும் மக்கள் நலனை நோக்கமாகக் கொண்ட திட்டமாதலால், இதில் அரசுசார்பற்ற தொண்டு நிறுவனங்களை பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சென்யில் உள்ள ''மெட்ராஸ்இன்ஸ்டிட்யூட் ஆப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ்'', ''யூனிசெப்'' நிறுவனம், காந்திகிராமம் பல்கலைக்கழகம், நிதி நிருவாகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, சென்னை பொருளாதாரக் கல்வி நிறுவனம் , தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனம் புதுடெல்லி, அனைத்திந்திய உள்ளூர் தன்னாட்சி நிறுவனம் மும்பை, ''மைராடா'' நிறுவனம், சென்னை சி.பி.ஆர். சுற்றுச் சூழல் கல்வி மையம், சென்னை சத்தியமூர்த்தி பவுண்டேஸன் போன்ற நிறுவனங்களில் உள்ள வல்லுநர்கள், மேற்படி கருத்துக்களைப் பரவச்செய்து, மக்களிடையே மனமாற்றப்போக்கை ஏற்படுத்த இயலும்; இத்தகைய வாய்ப்புகளை முறையாகவும் முழுமையாகவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். (பத்தி 4.5.16)

**26.** அனைத்து அரசுத்துறைகளும், அரசுத் துறை நிறுவனங்களும் ஆண்டுதோறும் தங்களது பணியாளர்களின் ஊதிய வகையில் ஆகும் செலவில் 0.5 சதவீதத்திற்கான தொகையை பயிற்சிக்காக ஒதுக்க வேண்டும் என்று பணியாளர் நிருவாகச் சீர்திருத்தத்துறையின (பயிற்சி III) 17.7.95 ஆம் நாளிடட 239 ஆம் எண் அரசானையில் ஆணையிட்டுள்ளதால், கிராம/நகர்ப்பகுதி பயிற்சி மையங்களை வலுப்படுத்தும் செயல் நோக்கத்திற்காவும்,பயிற்சித் திட்டத்திற்காகவும் ஏற்படுத்தப்படவிருக்கிற பயிற்சி நிதிக்கு ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டப் பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநாகராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் தங்களது ஆண்டு ஊதியச் செலவுத் தொகையில் 0.5 சதவீதத்திற்குக் குறையாத ஒரு தொகையை அளிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படலாம். இந்நிதி, ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படலாம். ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம், நகர்ப்பகுதி அடிப்படை வசதித்திட்டம், நேரு வேலைவாய்ப்புத்திட்டம், பிரதமர் சுய வேலைவாய்ப்புத்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். தவிரவும் 'யூனிசெப்'' நிறுவனம், நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி, தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த நிதிகளிலிருந்தும் இதற்கான உதவியைப் பெறலாம்.(பத்தி 4.5.16)

**27.** உள்ளாட்சி மன்றகளுடன் அலுவல் தொடர்புடைய சார்பு முகவரமைப்புகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும், சம்பந்தப்பட்ட துறையின் மாநிலத் தலைமை அலுவலகத்தில் ஏற்கெனவே பயிற்சிப் பிரிவு (Training Cell) எதுவும் செயல்படாமல் இருந்தால், இருக்கின்ற பணியாளர்களைக் கொண்டு பொருத்தமான பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுதததுதல் வேண்டும். இப்பிரிவு, இப்பொறுப்பினை எடுத்துக்கொண்டு பயிற்சித் தேவைகளை மதிப்பீடு செய்தல், அலுவலர்களைப் பல்வேறு நிறுவனங்களுக்கு பயிற்சிக்கு அனுப்புதல், பணிமுன்னேற்றங்களை ஆய்வு செய்தல், துறையின் பயிற்சித் தேவைகளுக்கினங்க பாடத்திட்டங்களைப் புத்தகாக்கம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும். (பத்தி 4.5.16)

**28.** பயிற்சி அளிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம் அளவில் இருப்பதால் விரைவு பயிற்சித் திட்டம் ஒன்று உடனடியாகத் தொடங்கப்படல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்க இத்திட்டத்தில் உரிய முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அலுவலர்களுக்கும் பயிற்சித்திட்டம் தொடங்கப்படல் வேண்டும்.(பத்தி 4.5.16)

**29.** பயிற்சித் திட்டங்களை வகுப்பதற்காக அமைக்கப்படவிருக்கும் பயிற்சிப்பிரிவு, பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்; அதாவது, அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களின் பயனாக, அலுவல் சார்பற்றவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், ஒதுக்கப்பட்டுள்ள அலுவல்களையும் ஒட்டி, உள்ளாட்சி மன்றங்களை நிருவகிப்பதில் அவர்களுக்குள்ள உரிமைகளையும், கடமைகளையும் உணர்த்தும் வகையில், மேற்படி அலுவல் சார்பற்றவர்களுக்கான பயிற்சித் திட்டம் அமைய வேண்டும். அதே நேரத்தில், அலுவலாகளுக்கான பயிற்சித்திட்டம், அரசின் அதிகாரங்கள் தேர்ந்தெடுக்கப்ட்ட பிரதிநிதிகளிடத்தில் நிலை பெற்றிருக்கும் புதிய அமைப்பு முறையில் அவர்களுக்குள்ள புதிய பங்கு பணியை உணர்த்துகின்ற வகையில் அமைவதுடன் அறிமுக நிலை, அலுவல் நிலை, நிருவாக நிலைப் பயிற்சித் திடடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும். உள்ளூர் மக்களாட்சி முறை வெற்றி பெறுவதற்கான திறமையினையும், மனப்பக்குவத்தினையும் வளர்ப்பதே அனைத்து பயிற்சித் திடடங்களின் மையக்கருத்தாக அமைய வேண்டும். (பத்தி 4.5.16)

**30.** தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலமாகவும், மாநில அளவிலான தேர்வுக் குழுக்கள் மூலமாகவும் நியமிக்கப்படும் இளநிலை உதவியாளர்களும், இதரர்களும், அவர்கள் புதிதாக பணியேற்குமுன், பவானிசாகர்–சிவில் பணிகள் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் பயிற்சி, அவர்கள்

அரசின்/ உள்ளாட்சி நிருவாகத்தின் அடிப்படைகள் குறித்து முழுமையான பயிற்சி பெற்றவர்களாக அமைந்து, பணியில் சேர வேண்டும். (பத்தி 4.5.16)

**31.** புதிதாகப் பணியில் சேர்ந்தவர்களுக்கும், ஏற்கெனவே பணியில் சேர்ந்தவர்களில் பயிற்சி எதுவும் அளிக்கப்பெறாதவர்களுக்கும் செயல்முறைப் பயிற்சி அளிக்கப்படும்; புதிதாகப் பணியில் சேர்ந்தவர்கள், குறித்த காலத்திற்கொருமுறை நடத்தப்படும் முறையான செயல் முறை பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து பயிற்சி பெறுபவர். பணியில் சேர்ந்து ஆனால் இத்தகைய பயிற்சி பெறாத அனைத்துப் பணியாளர்கள் பற்றிய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு இவர்கள் ஒரு குறிப்பிட்ட காலவுரையறைக்குள் பயிற்சியை முடிக்க விரைவு பயிற்சித் திட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டும்.. இத்தகைய செயல் முறைப் பயிற்சித்திட்டம் நிருவாகம் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல் பற்றிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். பணியாளர்கள், சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை பற்றி முழுமையாக அறிந்திருத்தால்தான் நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டடு, கணக்குகள் சரிவர வைத்துவரப்படுவதுடன், இதன் பயன்கள் உரிய காலத்தில் முழுமையாக மக்களைச் சென்றடையும்.(பத்தி 4.5.16)

**32.** பயிற்சித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள், மறைமலை நகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூரிலுள்ள நகர்ப்பகுதி ஆய்வுகள் மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் உள்ளமைப்பு வசதிகள் (Infrastructural facilities) வலுப்படுத்தப்படல் வேண்டும். இந் நிறுவனங்கள் முறையே ஊரக மற்றும் நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் விவகாரங்கள் குறித்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப்பணிகளையும் மேற்கொள்ளல் வேண்டும்(பத்தி 4.6.15)

## பிரிவு: 6. உள்ளாட்சி நிருவாகத்தில் சமூதாயப் பங்கேற்பு:

**33.** அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் வெற்றி பெற்று தொடர்ந்து நடைபெற சமுதாயத்தின் பங்கேற்பு மிக முக்கியமானதாகும். சமுதாயம், திட்டப்பணிகளைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காளித்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பங்குகொள்வதோடு நின்றுவிடாமல் இயன்றளவு செலவுகளைப் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும். சமுதாயத்தை ஒருங்குதிரட்டவும், அதில் அதன் பங்குக்கேற்க தக்க அமைப்புகளை உருவாக்கவும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களால் தான் இயலும்; எனவே தொண்டு நிறுவனங்கள், சமுதாயத்தை ஒருங்கு திரட்டும் பணியில் மட்டுமல்லாமல், கொள்கை வகுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிலும் பங்கு கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. (பத்தி 4.6.15)

**34.** சமூதாய அடிப்படையிலான, அரசியல் சார்பற்ற, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டு, அம்மக்களோடு நெருங்கிய, பயனுள்ள இணக்கத்தைக் கொண்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு உரிய அங்கீகாரம் அளித்து, நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் அடிமட்ட மக்களின் நலனுக்கான திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும், நிருவகிப்பதிலும், பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.(பத்தி 4.6.15)

**35.** கிராமப்பகுதிகளிலும், நகர்ப்பகுதிகளிலும் உள்ளாட்சி அமைப்பு நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாய அமைப்புகள் அனைத்தையும் . உள்ளூர் பகுதிகளின் செயல் திட்டங்களை வகுப்பதிலும், திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் ஈடுபடுத்தும் வகையில் பட்டியல் ஒன்று உடனடியாகத் தயாரிக்கப்படவேண்டும். திட்டம் வகுப்பது, செயல்பாட்டைக் கவனிப்பது போன்ற பணிகளுக்காக அமைக்கப்படும் பல்வேறு குழுக்களிலும் இவர்கள் பங்கு பெறலாம். (பத்தி 4.6.15)

**36.** அரசியல் அமைப்புச் சட்டத்தின் 74ம் திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு நகர்ப் பகுதி வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் திட்டமிடுவதில், கீழ் மட்டத்திலிருந்து தொடங்கும் அணுகுமுறையைப் பின்பற்றி சமுதாய அளவில் மிகச் சிறு திட்டங்களிலிருந்து தொடங்கி நகர/மாவட்ட பெரு நகரத் திட்டங்களாக விரிவு படுத்த வேண்டும். மேலும் நகர்ப் பகுதி ஏழைகளுக்கான ஒட்டு மொத்த மாநகரத் திட்டம ஒன்றையும் உருவாக்க வேண்டும். (பத்தி 4.6.15)

**37.** தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், வாய்ப்புள்ள இடங்களில் சராணர் இயக்கம், தேசிய பணித் திட்டம் போன்ற அமைப்புகளையும், குடி நீர் வழங்கல், சாலைகள், தெரு விளக்கு வசதிகள் போன்ற சமுதாய அடிப்படை வசதிகளின் பராமரிப்பில் ஈடுப்படுத்தலாம். (பத்தி 4.6.15)

**38.** முக்கியமான குடிமைப்பணிகளை முறையாகப் பராமரித்தல், மாணவர்களும் பொதுமக்களும் ஈடுபடுத்தப்பட வேண்டிய அவசியத்தை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.(பத்தி 4.6.15)

## பிரிவு:7. உள்ளாட்சி மன்றங்கள் – அதிகாரங்களின் போதுமான தன்மையும், நடைமுறைகளைச் சீரமைத்தலும்.

**39.** நிதி ஆதாரங்களைப் பரவலாக்கி உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுவதால், உள்ளாட்சி மன்றங்களின் சொத்துக்களையும் பொது நலனையும் பாதுகாப்பதற்காக குறிப்பாக வருவாய் கணக்கிலான செலவுகள், குத்தகைஇஏலம் மூலம் கிடைக்கும் வருவாய் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு துறைத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து அரசு போதிய அமைப்பு முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

**40.** பணிகளை வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் முடிப்பதற்கு ஏதுவாகவும், தரமாக அமையவும் ஊரக மற்றும் நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு நிலைகளிலுள்ள தொழில் நுட்ப அலுவலர்களின் தொழில் நுட்ப ஒப்புதலளிப்பு அதிகாரங்களை தகுந்தவாறு உயர்த்தலாம். (பத்தி 4.7.18)

**41.** வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்கள் அனைத்தும், தற்போதுள்ள நடைமுறையின்படி மேற்கொள்ளப்படலாம். பொறுப்புகள் பஞ்சாயத்திடம் நிலைபெற்றிருக்கலாம். பணிகளை உரியவாறு குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கு பஞ்சாயத்துதான் முழுப்பொறுப்பாகும். இதேபோன்றே பேரூராட்சி மற்றும், நகராட்சிப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்காக அதிகாரங்கள் பேரூராட்சிகளிடமும், நகராட்சி குழுக்களிடமும் நிலை பெற்றிருப்பதுடன் அதற்காக அவற்றையே பொறுப்பாக்கலாம் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது. (பத்தி 4.7.18)

**42.** ஒப்பந்தப்புள்ளி நடைமுறை வெளிப்படையாகவும், ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்துவதாகவும் அமையவேண்டும் என்பது மட்டுமின்றி, பணிகளின் தரம் சிறப்பாக அமைவதை நோக்கமாகக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைகளைப் பெறுவதில் தற்போது எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் களைவதற்காக, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புடன். ஒப்பந்தப்புள்ளி விவர அட்டவணைகளும் வெளியிடப்படலாம். (பத்தி 4.7.18)

**43.** ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் விலை மிகவும் சொற்பமாக உள்ளதால், இவற்றை விலைக்கு விற்கும் முறை கைவிடப்படலாம். ( பத்தி 4.7.18)

**44.** தொழில் நுட்பத்துறைகள் முடிவுசெய்த விலைவீத விவர அட்டவணைகள் (Schedule of Rates) இரகசியமாக இல்லாமல் அனைவரும் அறியும்படியானதாகவும், நியாயமான அளவுக்கு உள்ளூர் விலை வீதங்களைப் பிரதிபலிப்பனவாகவும் இருக்க வேண்டும். (பத்தி 4.7.18)

**45 .** ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்வது குறித்தும், ஒப்பந்தப்புள்கலில் உள்ள தவறுகள் பற்றி அளிக்கப்படும் புகார்களைக் கவனித்து தீர்ப்பது குறித்தும் உள்ளாட்சி மன்றங்களுக்குப் பரிந்துரைக்கும் அதிகாரங்களுடன் ஊராட்சி நீங்கலாக, ஒவ்வொரு உள்ளாட்சி மன்றத்திலும் "பணிகள் குழு" அமைக்கப்பட வேண்டும். ஊராட்சிகள் தாங்களே இப்பணியைக் கவனித்துக் கொள்ளலாம். இக்குழு, பணிகளின் செயலாக்கத் தரத்தையும் ஆய்வு செய்யலாம். (பத்தி 4.7.18)

**46.** ஒப்பந்தப்புள்ளிகளை விரைவில் முடிவு செய்து, பணிகளைத் தொடங்கும் பொருட்டு, மதிப்பீட்டு வீதத்திற்கும் அதிகமாக விலை குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை (Excess over Estimate Rates) ஏற்றுக் கொள்வதற்கு, தற்போதுள்ளவாறு, பல்வேறு நிலைகளில் ஒப்புதல் பெற அனுப்புவதற்குப்பதிலாக, பணிக்குழுவின் பரிந்துரைகளுடன், உள்ளாட்சி மன்றக் குழுக்களுக்கே ஒப்புதல் அளிக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். (பத்தி 4.7.18)

## பிரிவு: 8. கட்டுப்பாட்டு முறை

**47.** வரவு–செலவுத் திட்டத்தை, ஒரு கருவியாகக் கொண்டு, கட்டுப்பாட்டு முறையை, உரிய அளவுக்குக் கடுமையாகப்படவேண்டும். இதற்காக, அடுத்த ஆண்டு தொடங்குவதற்கு முன்னர்அந்த ஆண்டில் செயற்படுத்தப்பட வேண்டிய பணிகள் (மத்திய அரசுத் திட்டங்கள், மாநில அரசுத் திட்டங்கள், உள்ளாட்சி மன்றப்பணிகள்) பற்றிய விவரங்களை உள்ளாட்சி மன்றங்கள் முன்னதாகவே பெறுவதுடன், வரும் ஆண்டின் திட்டத்தினையும் முன்னதாகவே தயாரித்திடல் வேண்டும். வரவு–செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்ததில் மாறுதல்கள் இருப்பதை முறைப்படுத்தி, சீர் செய்ய நடவடிக்கை எடுக்க இயலும் வகையில் ஓராண்டில் இரு திருத்தங்களுக்கு மேல் , அதாவது ஆகஸ்ட் மாதத்தில் திருத்த மதிப்பீடும், (Revised Estimate) அடுத்த ஜனவரி மாதத்தில் இறுதித் திருத்த நிதியொதுக்கமும் (Final Modified Appropriation) செய்வது தவிர வேறு செய்யக்கூடாது. இதற்கான விரிவான வழிகாட்டு நெறிகளை அரசு உருவாக்கி உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பலாம். (பத்தி 4.8.02)

**48.** ஊராட்சி ஒன்றியங்களில் தேவையற்ற பதிவேடுகளைக் குறைத்து அதன் மூலம் எழுத்துப்பணியையும் குறைப்பதால், அலுவலகப்பணியில் திறமையை மேம்படுத்த வாய்ப்பு உள்ளது. இது தொடர்பான தேவையான செயற்குறிப்புகள் முன்பே அரசுக்கு, உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறை இயக்குநரின் இசைவுடன் ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ளதாகத், தெரிவிக்கப்பட்டது. இது இறுதி வடிவம் பெறும் வரை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய அளவில் கணிணி மயமாக்கப்பட வேண்டுமெனவும் கருத்து தெரிவிக்கப்படுகிறது (பத்தி 4.8.08)

**49.** பதிவேடுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், ஊராட்சி ஒன்றியங்களில் பின்வரும் பதிவவேடுகள் வைத்து வரப்பட வேண்டியது அவசியம் என்று ஆணையம் கருதுகிறது. ( பத்தி 4.8.09).

அ) பெறப்பட்ட அரசு மானியங்கள் மற்றம் அவற்றிற்கான செலவின விவரங்களைக் காட்டும் முதன்மைப்பதிவேடு : (Master Register)

ஆ) அறக்கட்டளையாகக் கொடுக்கப்பட்ட சொத்தின் தன்மையையும், அதிலிருந்து செய்யப்பட்ட செலவின் நோக்கத்தையும் விவரிக்கும் அறக்கட்டளை சொத்துப்பதிவேடு;

இதனுடன், பின்வரும் வெளியீடுகளும் பராமரிக்கப்படுவது அவசியமெனக் கருதப்படுகிறது.

இ) வெவ்வேறு வகைப்பட்டிகளுக்குத் தொகை வழங்க அனுமதியளிப்பதற்கு முன்னர் கவனிக்க வேண்டிய தணிக்கைக் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகள் அடங்கிய கையேடு;

ஈ) உள்ளாட்சி மன்றங்களுக்கு கூடுதல் அதிகாரங்களும், பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்பட்டதையடுத்து பொறியியல் பணியாளர்களின் பணி அட்டவணை.

**50.** பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பராமரித்து வரும் படிவங்களும், பதிவேடுகளும் மிக அதிகமாக உள்ளன. இவற்றை முறையே பேரூராட்சிகள் இயக்குநரும், நகராட்சி நிருவாக இயக்குநரும் பரிசீலித்து இவற்றை எளிமையாக்குவதற்கு, தலநிதி கணக்குத்துறை இயக்குநரை கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம். மாநகராட்சிகளைப் பொருத்தவரை, அரசின் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். (பத்தி 4.8.26)

**51.** மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தணிக்கைப் பணிகளை தற்போது, உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறை இயக்குநர் கவனித்து வருகிறார். ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டங்கள் தொடர்பான தணிக்கைப் பணிகளையும் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் துறை இயக்குநர் கவனித்து வருகிறார். ஊராட்சி அளவிலான ஏனைய இனங்கள் குறித்து தணிக்கைப் பணிகளை, ஊராட்சி விரிவாக்க அலுவலர்கள் கவனித்து வருகின்றனர். ஊராட்சிகள் நிலையில் காணப்படும் இத்தகைய இரட்டிப்பான தணிக்கைப்பணி தவிர்க்கப்படலாம் என்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஊராட்சிகளில் ஒற்றைத் தணிக்கை முறையை பின்பற்றுவது தொடர்பான சாத்தியக் கூறுகள் குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

**52.** மாநிலக்கணக்குகளை, பொதுக்கணக்குகள் குழு தணிக்கை செய்வதைப் போன்றே, சென்னை மாநகர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் கணக்குத் தணிக்கைக்காக பொதுக்கணக்குகள் குழுவைப்போன்ற மன்றங்கள் ஏற்படுத்தப்படலாம். இவை, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை தொடர்பான தணிக்கைக் கருத்துககளைக் கண்காணிக்கலாம். எனினும், ஊராட்சிகளைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலையே தொடர்ந்து நீடிக்கலாம் (பத்தி 4.8.26)

**53.** பதிவுருக்களை ஒப்படைக்கும் தற்போதைய நடைமுறையில், பதிவுரு குறித்த பொறுப்பு கைமாறி, அவற்றைப் பராமரித்தல், தணிக்கைக்கு அளித்தல் தொடர்பான பொறுப்புகள் உள்ளாட்சி மன்றங்களின், ஆவணக்காப்பாளர், மேலாளர்/தலைமை உதவியாளர் ஆகியோரைச் சாருகின்றது. எனவே, பழைய ஒப்படை நடைமுறைக்குப் பதிலாக பதிவுருக்களைத் தம் பொறுப்பில் பெற்றுக் கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். (பத்தி 4.8.26)

## பிரிவு: 9. செயல்பாடு, பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்தவதற்கான ஏற்பாடு

54. அ) உள்ளாட்சி மன்றப் பணியார்கள், தம் கடமைகளைச் சிறப்புற செய்வதற்கு ஊக்கமளிப்பதற்காக பரிசு வழங்கும் முறையும் (ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்) பணிகளைச் சரிவர செய்யாதவர்களுக்கு தண்டனை வழங்கும் முறையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். (பத்தி 4.9.09)

ஆ) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் அதாவது சிறந்த ஊள்ளாட்சி மன்றத் தலைவர்கள், மேயர்கள் ஆகியோருக்கும், சிறந்த உள்ளாட்சி மன்றங்களுக்கும் சான்றிதழ் வழங்குவதன் மூலம், ஊக்கம் அளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படுவது அவசியம் என்று கருதப்படுகிறது (பத்தி 4.9.09)

55. உள்ளாட்சி மன்றங்களின் சாதனையை அங்கு வாழ்மக்கள் அனைவரும் அறியும் வகையில், முறையான தகவல் பரப்பு ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் அதிகாரிகளின் செயல் திறனை அனைவரும் அறிந்து கொள்ள இயலும் வகையில், அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மக்களிடம் தங்கள் செயல்பாட்டினை எடுத்துரைக்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சி மன்றங்கள் நிர்ணயித்த இலக்கு, எய்திய சாதனை, வரவு–செலவுத் திட்டத்திற்கான வருவாய் ஆதாரங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான அடிப்படை அம்சங்கள், முந்தைய ஆண்டுகளுடனும், இது போன்ற ஏனைய உள்ளாட்சி மன்றங்களுடனும் ஒப்பிட்டு தற்போதைய உள்ளாட்சி மன்றங்களின் பணியின் அளவு, தரம் ஆகியவற்றை எளிமையான நடையில் விவரிக்கும் ஆண்டு செயல்பாட்டு அறிக்கையைத் தயாரித்து வெளியிடுதல் வேண்டும். (பத்தி 4.9.09)

56. குறிப்பிட்ட துறைகளின் பணிகள், நிதிவகையிலான செயல்பாடு, எதிர்பார்க்கப்படும் பணியின் தரம், அளவு ஆகியவற்றைத் தயாரித்தல், அளிக்கப்டும் தனியொரு பணிக்கு அதன் தரம், அளவு வகையில் ஆகும் செலவினை மதிப்பிட ஏதுவாக போதுமான கணக்கு ஆவணங்கள் வைத்து வருதல், தனிப்பட்ட துறைகளின் செயல்பாடு ஆகியவறிற்கு யார்யார் பொறுப்பு என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தும் நிருவாகப் பொறுப்புகளை வரையறுத்தல் அவசியம்.(பத்தி 4.9.09)

57. உள்ளாட்சி மன்றங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பைக் கண்காணிப்பதற்கு "லோக்பால்"அல்லது "லோக்அயூக்தா" போன்ற அமைப்பு அல்லது அறிஞர்கள் குழு ("ஆம்பட்ஸ்மேன்") என்னும் அமைப்பு ஏற்படுத்தப்படலாம். (பத்தி 4.9.09)

## பிரிவு: 10. உள்ளாட்சி மன்றங்களுக்கான புள்ளி விவரத் தகவல் அமைபபு.

58. ஒவ்வொரு நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றத்திற்கும் அதாவது நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கும். நிருவாகத்திறமையை மேம்படுத்தும் ஓர் அம்சமாக நகர்ப்பகுதி புள்ளிவிவரத்தகவல் அமைப்பு (URBIS) ஏற்படுத்துவது அவசியமாகும். செங்கற்பட்டு நகர் பகுதிக்கு ஒரு புள்ளிவிவரத்தகவல் அமைப்பு ஏற்படுத்தியதைத் தொடர்ந்து ஏனைய நகர்களிலும் இத்தகைய அமைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படலாம். பேரூராட்சிகளில், பேரூராட்சி உதவி இயக்குநர்களின் அதிகார வரம்பையொட்டி, மாவட்ட அளவில்/மண்டல அளவில் புள்ளிவிவரத் தகவல் அமைப்பு ஏற்படுத்துதல் வேண்டும். (பத்தி 4.10.06)

**59.** இப்பணியில் ஏற்படும் முன்னேற்றத்தை நுணுக்கமாகக் கண்காணிப்பதற்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் அளிப்பதற்காக, துறைவல்லுநர்கள், பயன்படுத்துபவர்கள் அடங்கிய சீரமைப்புக் குழுவை நகராட்சி நிருவாக இயக்ககத்தில்/ பேரூராட்சிகள் இயக்ககத்தில் அமைக்கலாம்.(பத்தி 4.10.06)

**60.** நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் நகர்ப்பகுதி தகவல் அமைப்பு ஏற்படுத்தப்டுவதுபோன்று, ஊரகப்பகுதிகளில் ஊரகப்பகுதி தகவல் அமைப்பு (RURIS) ஏற்படுத்த வேண்டியது அவசியம். ஊராட்சி நிலையிலும், ஊராட்சி ஒன்றிய நிலையிலும் கிடைக்கும் புள்ளி விவரங்களை ஒருங்கிணைப்பதற்காக. ஊராட்சி ஒன்றிய நிலையிலும், மாவட்ட நிலையிலும் கணினிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேற்சொன்ன இரு நிலைகளிலும் புள்ளிவிவரத் தகவல் அமைப்புகளை ஏற்படுத்துதல் அவசியமாகிறது. (பத்தி 4.10.06)

**61.** மாவட்ட அளவில் முன்பே சேகரிக்கப்பட்டு "நிக்நெட்" (NICNET)ல் உள்ள புள்ளிவிவரங்களை வளர்ச்சிப்பணிகள் திட்டமிடலுக்கு பயன்படுத்திடலாம் (பத்தி 4.10.06)

**62.** கணினி செயல்படும் பணியின் முன்னேற்றத்தை நுணுக்கமாகக் கண்காணிப்பதற்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் அளிப்பதற்காக, துறைவல்லுநர்கள், பயன்படுத்துபவர்கள் அடங்கிய சீரமைப்புக் குழுவை ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் அமைக்கலாம்.(பத்தி 4.10.06)

**63.** ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், பஞ்சாயத்து, நகராட்சி, பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாவட்டம்/மண்டலம் நிலைகளில் கணினி மயமாக்குவதற்கு ஏற்படும் மூலதனச் செலவுக்கு அரசே (ஒரே தடவை மட்டும்) மானியம் அளித்து உதவி செய்ய வேண்டும். பின்னர் இவற்றை அந்தந்த உள்ளாட்சிமன்றங்களே பராமரிக்கும். பேரூராட்சிகளைப் பொறுத்த மட்டில், பராமரிப்புச் செலவை மாவட்டத்திலுள்ள/ மண்டலத்திலுள்ள பேரூராட்சிகள் பகிர்ந்து கொள்ள வேண்டும். (பத்தி 4.10.06).